# 12 ஆம் வகுப்பு தமிழ் இலக்கணம் 1

24) மயங்கொலிப் பிழைகள் என்றால் என்ன ?

**Answer :** (i) ந, ண, ன / ல, ள, ழ / ற, ர ஆகிய எட்டு எழுத்துகளும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.
(ii) இவ்வெழுத்துகளை ஒலிக்கும் போது நுண்ணிய வேறுபாடுகளை மட்டுமே கொண்டிருப்பதால் எது சரி, எது தவறு என மயங்க வைப்பதால் ஏற்படும் பிழைகளையே மயங்கொலிப் பிழைகள் என்கிறோம்.

47) எழுவாய்த் தொடர் எவ்வாறு அமையும் ?

**Answer :** எழுவாய் உள்ள தொடர்களில் அதன் வினைமுற்று, எழுவாயுடன் திணை, பால், எண், இடம் ஆகிய ஐந்தும் பொருத்தம் உடையதாய் அமையும்.

48) தமிழ்மொழியில் திணைப் பாகுபாடு எவ்வாறு அமைந்துள்ளது ?

**Answer :** தமிழ்மொழியில் இருதிணைப் பாகுபாடு என்பது, பொருள்குறிப்பை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளது.

51) பால் உணர்த்தும் பெயர்கள் எவை ?

**Answer :** தமிழிலுள்ள பெயர்கள், படர்க்கை இடத்தில் வரும். படர்க்கைச் சுட்டுப் பெயர்கள் (அவன், இவன்; அவள், இவள், அவர், இவர், அது, இது; அவை, இவை) அன், அள், அர், து, வை என்னும் விகுதிகள் பெறும்.

55) அஃறிணைப் பன்மைப் பெயர்கள் எவ்வாறு முடியும் ?

**Answer :** தமிழில் உயர்திணைப் பன்மைப் பெயர்கள் (இரண்டு மனிதர்கள்) எனப் பன்மை விகுதி பெற்று வரும். ஆனால், அஃறிணைப் பன்மைப் பெயர்கள் (பத்துத் தேங்காய்கள் - என), பன்மை விகுதி பெறுவது கட்டாயமில்லை.
எ - கா : பத்துத் தேங்காய்.

WHATSAPP 8056206308
JOIN PAID WHATSAPP TEST GROUP WITH ANSWERS
LOTS OF FREE PAPERS AVAILABLE IN MY WEBSITES

58) இடப்பாகுபாடு எப்படி வெளிப்படும் ?

**Answer :** இடப்பாகுபாடு, பெயர்ச்சொற்களில் வெளிப்படாது. அவன், அவள், அவர், அது, அவை முதலான பதிலிடு பெயர்களிலும், வினைமுற்றுகளிலுமே இடப்பாகுபாடு வெளிப்படும்.

81) உளப்பாட்டுத்தன்மைப் பன்மை என்பது யாது?

**Answer :** பேசுபவர் (தன்மை) முன்னிலையாரையும் தன்னுடைய சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ஆகும்.
**சான்று :** நாம் முயற்சி செய்வோம்.

82) உளப்படுத்தாதத் தன்மைப் பன்மை என்பது யாது?

**Answer :** பேசுபவர் முன்னிலையாரையும் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது உளப்படுத்தாத தன்மைப் பன்மை ஆகும்.
**சான்று :** நாங்கள் முயற்சி செய்வோம்.

117) வெண்பா எவ்வோசை உடையது? விளக்குக.

**Answer :** 1. வெண்பா செப்பலோசை உடையது.
2. சொல்லுதலை (செப்பலை) அடிப்படையாய்க் கொண்டது, வெண்பா.

123) அசையாவது யாது? அஃது எத்தனை வகைப்படும்?

**Answer :** 1. எழுத்து ஒன்றோ பலவோ சேர்ந்து அசைத்து இசைத்துச் சீர்க்கு உறுப்பாய் வருவது அசை.
2. அசை நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

131) தளை என்பதனை விளக்குக.

**Answer :** நின்ற சீரின் ஈற்றசையும் வரும்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது, தளை.